பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

29 06 2026 MONDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சர்வதேச அளவில் பொருளாதாரம் சரிவை சந்தித்த போதிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- நாடுமுழுவதும் சுகாதார கட்டமைப்பு வசதிகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்கேற்றுள்ள இரண்டு நாள் மாநாடு, முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் இன்று சென்னையில் தொடங்கியது.

- தமிழகத்தில் ஆவின் பால் விநியோகம் தடையின்றி நடைபெறுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபியும், பாமகவும் வலியுறுத்தியுள்ளன.

- உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<

சர்வதேச அளவில் பொருளாதாரம் சரிவை சந்தித்த போதிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக முதன்மை பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாகேஷ்வரன் எழுதியுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்பதிலும் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<

நாடுமுழுவதும் சுகாதார கட்டமைப்பு வசதிகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மத்திய சுகாதார குழுமத்தின் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் இதுவரை ஒரு லட்சத்து 86 ஆயிரம் நலவாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

23 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகளும், 157 மருத்துவக் கல்லூரிகளும் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பின்தங்கிய மாவட்டங்களிலும் இந்த மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்கேற்றுள்ள இரண்டு நாள் மாநாடு, முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் இன்று சென்னையில் தொடங்கியது.

காலை காவல்துறை அதிகாரிகளுடனும், பிற்பகலில் மாவட்ட ஆட்சியர்களுடனும் முதலமைச்சர் விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், சட்டம் ஒழுங்கு சூழல் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<

உயர்கல்வித்துறையின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வுக்கு நாளை தொடங்கி, அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கான இணையதளத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

த.வெ.க. ஆட்சியை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை மிரட்டும் வகையிலும், ஊடகங்களுக்கு பதிலளிக்காமலும் முதலமைச்சர் திரு. விஜய் செயல்பட்டு வருவதாக திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போதைப்பொருள் பயன்படுத்தியதை போல் காணொலியை வெளியிட்ட அமைச்சருக்கு எதிராக போராட்டம் நடத்திய திமுகவினர் கைது செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் திரு. சிவசங்கர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதும், திரு. எ.வ. வேலு வீட்டில் சோதனை நடத்தப்பட்டதும் மிரட்டல் நடவடிக்கை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

த.வெ.க. அரசின் இத்தகைய செயல்பாடுகளுக்கு மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

அரசு கல்லூரி உதவிப்பேராசிரியர் தேர்வு முடிவுகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறப்படும் புகார்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி த.வெ.க-அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இளையோரின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பேராசிரியர் பணியிடங்களுக்கு தகுதியானவர்கள்

நியமிக்கப்படுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட உதவிப் பேராசிரியர் தேர்வு முடிவுகளில் பெரும் குளறுபடிகள் நடைபெற்றுள்ளதாக வந்துள்ள செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

முறைகேடுகளுக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. சண்முகம் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் அடுத்த சில மாதங்களில் தேர்தல் வரும் என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறுவது ஏற்புடையதல்ல என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.

இன்று பெரம்பலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க. அரசு தற்போது தான் புதிய அரசை அமைத்திருப்பதாக கூறினார்.

த.வெ.க. அரசின் செயல்பாடுகளை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் தெரிவித்தார்.

>>>>>><<<<<

தமிழகத்தில், ஆவின் பால் விநியோகம் தடையின்றி நடைபெறுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தினசரி பால் விநியோகம் 30 சதவீதம் அளவிற்கு குறைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நாள்தோறும் 16 லட்சம் லிட்டர் ஆவின் பால் விநியோகம் செய்யப்பட்டு வந்ததாகவும், தற்போது இது பதிமூன்றரை லட்சம் லிட்டராக குறைந்துள்ளது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஆவின் பால் நிறுவனம் திறம்பட கையாளப்படுவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாசும், ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் தேவையான பால் விநியோகத்தில் ஆவின் நிறுவனம் அலட்சியம் காட்டுவது கண்டிக்கத்தக்கது என்று கூறியுள்ளார்.

ஆவின் பால் கொள்முதல் விலை உயர்த்தப்படாததே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

**>>>>>><<<<<**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - வி ஆர் துரை - 25 Sec.)*

**>>>>>><<<<<**

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை நாளைவரை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி. சினேகா கூறியுள்ளார்.

**>>>>>><<<<<**

சேலம் மாநகராட்சி குடிநீர் விநியோகத்தை தனியார்மயமாக்கும் திட்டம் தொடர்பான தீர்மானத்தை ரத்து செய்வதாக மேயர் திரு. ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

**>>>>>><<<<<**

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை துணை ஆணையாளர் திரு. கௌசிக் இன்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

Georgia-வின் Batumi-ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Divi Bijesh தங்கப்பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Pratitee Bordoloy வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>><<<<<

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச சைக்கிள் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Harshveer Singh Sckhon வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<

இத்தாலி ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Anwesha Gowda வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இங்கிலாந்து-ஏ அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Hove-ல் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து-ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 222 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Grace Scrivens 88 ரன் எடுத்தார்.

Minnu Mani 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

223 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 46 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 226 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

Tejal Hasabnis 57 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா 1-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>><<<<<

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை இந்தியாவின் Deepti Sharma படைத்துள்ளார்.

>>>>>><<<<<

அமெரிக்க Smash டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Manav Thakkar இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<

உலக கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா இன்று லெபனானை எதிர்கொள்கிறது.

லெபனானில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 11.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<

வாலிபால் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா 42வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<

2028ஆம் ஆண்டு லாஸ்ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இந்திய மகளிர் அணி நேரடியாக தகுதி பெற்றுள்ளது.

>>>>>END<<<<<